**செய்தி வெளியீடு எண்: 341** **நாள்: 20.04.2010**

## மாநகராட்சி பள்ளிகளில் கலை பண்பாட்டுத்துறையின் மூலம் கலைப்பயிற்சிகள் அளித்தல்

கலை பண்பாட்டுத்துறை 5லிருந்து 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பல்வேறு வகையான கலைகளை தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் மூலம் பயிற்றுவித்தும், வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளித்தும் வருகிறது. அவ்வகையில் சென்னையில் 5 இடங்களிலும், தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் 35 இடங்களில் சவகர் சிறுவர் மன்றம் மூலம் கலைப்பயிற்சிகள் தற்பொழுது அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்விடங்களில் கோடைக்கால விடுமுறையை பயனுள்ள வகையில் கழிப்பதற்காகவும், நலிந்து வரும் கலைகளை காப்பாற்றிடவும், கலை பண்பாட்டுத்துறை கோடைக்கால கலைப்பயிற்சிகளை மிகக் குறைந்த கட்டணத்தில் மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

சென்னை மாநகராட்சி பள்ளிக் குழந்தைகளிடையே பொதிந்து கிடக்கும் கலைத்திறமைகளை வளர்க்கவும், வெளிக்கொணரவும் சென்னை மாநகராட்சி திட்டமிட்டு, இக்கலைப்பயிற்சிகளை கலை பண்பாட்டுத்துறையின் மூலம் செயல்படுத்தி வருகின்றது. 2009–2010 ஆம் கல்வியாண்டில் சென்னை மாநகராட்சியின் 40 பள்ளிகளில் இக்கலைப்பயிற்சிகளை கலை பண்பாட்டுத்துறை தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் வழங்கியது. 2010–2011 ஆம் ஆண்டிலும் ஜீன் மாதம் முதல் ஜனவரி மாதம் முடிய 8 மாதங்களுக்கு அதே 40 சென்னை மாநகராட்சி பள்ளிகளில் நடனம், குரலிசை ஆகிய கலைகளில் பயிற்சியளிக்க மாநகராட்சி இசைவளித்துள்ளது.

பள்ளி நேரத்தின் கடைசி வகுப்பும், பள்ளி நேரத்திற்கு பின் அதே அளவு நேரத்திற்கும் ( 1 ½ மணி நேரம்) இக்கலைப்பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது. வாரம் மூன்று நாட்கள் வீதம் மாதம் 12 நாட்கள் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.2,000/– சென்னை மாநகராட்சி ஊதியமாக கலை பண்பாட்டுத்துறையில் உள்ள தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் வழங்கி வருகிறது. இந்தப் பணி முற்றிலும் தற்காலிகமானது, அரசு பணிகளில் இந்த வேலைவாய்ப்பின் அடிப்படையில் எந்த முன்னுரிமையும் கோர இயலாது. இவ்வாறு எட்டு மாதங்கள் மட்டும் பயிற்சி அளித்திட தகுதியும், விருப்பமும் உள்ளவர்கள் இசைக்கலைமணி பட்டயத்துடன் இசை ஆசிரியர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள் குரலிசை வகுப்புக்கும் மற்றும் ஆடற்கலைமணியுடன் நட்டுவாங்க பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள் பரதநாட்டிய வகுப்புக்கும் பயிற்சி அளிக்க கலை பண்பாட்டுத்துறை ஆணையருக்கு கீழ்வரும் முகவரியில் தங்களுடைய புகைப்படத்துடன் கூடிய தன்விவரக்குறிப்பினை ( உரிய ஒளியச்சு சான்றிதழ்களுடன்) 30.04.2010க்குள் அனுப்பி வைக்கலாம்.

**ஆணையர்,**
**கலை பண்பாட்டுத்துறை,**
**'தென்றல்' அரசு இசைக்கல்லூரி வளாகம்,**
**டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலை,**
**சென்னை–600 028.**
**தொலைபேசி எண். 24618162, 24936136**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை–9.**